பாண்டிச்சேரி ஹோட்டல் மேலாண்மை & கேட்டரிங் தொழில்நுட்ப நிறுவனம்
கடலை வீதி, மகாலட்சுமி நகர் அருகில், முருங்கப்பாக்கம், புதுச்சேரி-605004
தொலைபேசி:(0413) 2358389 தொலைநகலி: (0413) 2353251
இணையதள முகவரி: http://pihmct.puducherry.gov.in மின்னஞ்சல்: pihmct@rediffmail.com

எண் PIHMCT/HSRT/2014-15 தேதி : 28-11-2014

# அறிவிப்பு

இந்திய அரசு, சுற்றுலா அமைச்சக நிதி உதவியுடன் கூடிய "Capacity Building for Service Providers" என்ற மத்திய திட்டத்தின் மூலமாக கீழ்க்கண்ட திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் (Hunar Se Rozgaar), பாண்டிச்சேரி ஹோட்டல் மேலாண்மை & கேட்டரிங் தொழில்நுட்ப நிறுவனத்தில் அளிக்கப்படவுள்ளது.

| வரிசை எண் | பயிற்சியின் பெயர் | பயிற்சி காலம் | மொத்த உதவித் தொகை | கல்வித் தகுதி | வயது வரம்பு |
|---|---|---|---|---|---|
| 1 | உணவு தயாரித்தல் (Food Production) | 8 வாரங்கள் | ரூ.2,000/- | எட்டாம் வகுப்பு தேர்ச்சி | 18லிருந்து 28 வரை |
| 2 | உணவு & பானகம் பரிமாறுதல் மற்றும் விடுதி பராமரித்தல் (Food & Beverage Service, also covering House keeping) | 6 வாரங்கள் | ரூ.1,500/- | எட்டாம் வகுப்பு தேர்ச்சி | 18லிருந்து 28 வரை |

புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலுள்ள தகுதியுடையவர்களிடமிருந்து மேற்கண்ட பயிற்சிகளில் **பயிற்சிபெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பயிற்சிக்கான விண்ணப்பப் படிவத்தை நிறுவன அலுவலகத்தில் வேலை நாட்களில் 01-12-2014லிருந்து 12-12-2014 வரை பெற்றுக்கொள்ளலாம்.** மேலும் விண்ணப்பப் படிவத்தை "http://pihmct.puducherry.gov.in" என்ற இணையதள முகவரியில் இருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஒரு பாஸ்போர்ட் அளவுள்ள கலர் புகைப்படம் மற்றும் சுய சான்றிதழிட்ட கீழ்க்கண்ட நகல்களுடன் நிறுவனத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 12-12-2014 (மாலை 5 மணி வரை).

(1) கல்விச்சான்றிதழ்,
(2) மாற்றல் சான்றிதழ்,
(3) பிறந்த பதிவு
(4) குடியிருப்பு சான்றிதழ் அல்லது வாக்காளர் அடையாள அட்டை அல்லது உணவுப் பங்கீட்டு அட்டை.

**பயிற்சி தொடங்கும் நாள்: 15-12-2014 (நிறுவன வளாகம்)**

குறிப்பு:

- இளநிலை/முதுநிலை பட்டம் பெற்றவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.
- தங்கும் வசதி செய்து தரப்படும்.
- விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே இத்திட்டத்தின் மூலம் எவ்வித பயிற்சியும் பெறாதவர்களாக இருத்தல் வேண்டும்.

27/11/14
முதல்வர் (பொறுப்பு)